[illegible]
V2 No7
July 1929

JL
R673m2V,N28
N29.2.7
182133

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 2—No. 7.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் உ | சுக்கில ஆண்டு ஆடித் திங்கள்<br>1929 ஹு ஜுலை மீ | இதழ் எ |

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சுயமரியாதை என்பது யாது? ... | கஎரு |
| அருசமயப் பகுதி ... ... | [illegible] |
| மதக்கொள்கையும் நம்பிக்கையும் ... | கஅ௧ |
| பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கீசு [illegible]வாண்டு கூறுதுமே ... ... | கஅஉ |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை ... | கஅஎ |
| பெண்ணடியவர் மூவர் ... ... ... | ககரு |
| குருபூசைச் சிறப்பு ... ... ... | ககக |

OFFICE OF THE REGISTRAR
15 JUL 1929
MADRAS

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

# சமாஜ அறிக்கைகள்

1. **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்** :—இந்த நூல் இன்னும் இரண்டு வாரத்துக்குள் அச்சிட்டு முடிந்துவிடக் கூடும். கையொப்பம் செய்தவர்கள் விரைந்து தங்கள் கையொப்பத் தொகையைச் செலுத்துவார்களாக. ஏனையோர் தாமதமின்றி முன்பணமும் அனுப்பிப் புத்தகங்களைப் பெறுவார்களாக. முன்பணம் அனுப்பியவர்கட்குப் புத்தகங்களை யனுப்பிய பிறகே வி. பி. ஆர்டர்கள் கவனிக்கப்படும்.

2. சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு ஒவ்வொரு சைவ சபையும் இணைக்கப்பட வேண்டுமென்று சைவ மகாநாடு தீர்மானித்திருக்கிறது. இதையொட்டித் திருநெல்வேலி, திருப்பாதிரிப்புலியூர் கூட்டங்களிற் கலந்துகொண்ட சைவ சபைகளும் ஏனைய சைவ சபைகளும் நம் சமாஜத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்று இவ்வறிக்கையைக் கண்டவுடன் விண்ணப்பஞ் செய்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். அவ்வாறு இணைக்கப்படுவதால் சமாஜத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் உதவிசெய்து நமது பத்திரிகையையும் இலவசமாகப் பெறலாம். வேறு எவ்வகையான பொருள் சம்பந்தமும் இவ்வாறு இணைத்துக் கொள்வதால் ஏற்படாது. ஒவ்வொரு சபையும் உடனே முந்துக.

3. திருப்பாதிரிப்புலியூரில் கூடிய சைவ மகாநாட்டில் கண்ட (ஒன்று முதல் நான்கு வரையுள்ள) உண்மைகளை ஒப்புக் கொள்வோரே சைவர்கள். அவர்களே சைவ சபைகளில் வாக்குரிமைக்குத் தகுதி யுடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது சமாஜப் பொதுக் கூட்டமும் அவ்வாறே தீர்மானித்திருக்கின்றது. ஆகவே நமது சமாஜத்து அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வாக்குரிமை வேண்டுமென்று கருதினால் உடனே காரியதரிசிக்கு அவ்வுண்மைகளை ஒப்புக்கொள்வதாகத் தெரிவிக்க வேண்டும். இவ்வுண்மைகளை ஒத்துக் கொள்ளாதவர்களும் உடனே தெரிவித்தால் அவர்கள் வாக்குரிமை யில்லாதவர்கள் என்று தனியாகக் குறித்துக் கொள்வதற்குச் சௌகரியமா யிருக்கும். இவ்வறிக்கையைக் காணும் ஒவ்வொருவரும் விரைந்து தமது கொள்கையை உள்ளவாறு தெரிவித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

4. கோடை விடுமுறைக்காக நிறுத்தி வைக்கப்பட்ட "சிவஞானபோதம்" பாடவகுப்பு மீண்டும் 15—7—1929 திங்கட்கிழமை முதல் திருவாளர் - கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு இல்லத்தில் தொடங்கப்படும். அங்கத்தவர் தங்கள் நண்பர்களோடு வழக்கம்போல் வந்து பயன் பெறுக.

5. சைவப்பேரறிஞர் திருவாளர் - கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் (எம். ஏ., எம். எல்.) வெளியிடக் கருதியுள்ள நூல்களைப் பற்றிய விளம்பரம் ஒன்றை மற்றோரிடத்தில் காண்க. அவர்கள் முயற்சிக்கு உதவிபுரிவது ஒவ்வொரு சைவரும் தமது சமயத்துக்காகச் செய்யவேண்டிய கடமைகளுள் தலையாயது என நாம் கூறவேண்டுவதில்லை. ஒவ்வொருவரும் இவ்வறிக்கையைக் கண்ணுற்றதும் கையொப்பம் செய்து திரு. பிள்ளையவர்களைத் திருத்தொண்டில் ஈடுபடுத்துமாறு வேண்டுகிறோம்.

6. **ஆயுள் அங்கத்தவர்கள்** :—

திருவாளர் - A. பொன்னுசாமி முதலியார், பறங்கிமலை.
,, அழகர்சாமி வேலர், கோனுப்பட்டு.
,, C. ஆறுமுக முதலியார், விழுப்புரம்.
,, V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், கோயமுத்தூர்.
,, C. S. சுவாமிநாத முதலியார், சென்னை.

இவர்கள் நமது சமாஜத்தில் ஆயுள் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளார்கள். இவர்களைப்போல் பல நண்பர்கள் சேர்ந்து உதவிபுரிய விரும்புகிறோம்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

15 JUL 1929
MADRAS

ஓம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"

| மலர் உ | சுக்கில ஆண்டு ஆடித் திங்கள்<br>1929 ஹு ஜூலைமீ | இதழ் எ |
|---|---|---|

## சுயமரியாதை என்பது யாது?

[பத்திராசிரியர்]

தெய்வீகம் பொருந்திய நம் தமிழ் நாட்டிலே சுயமரியாதை என்ற சொல்லானது ஓராண்டாக எங்கணும் காதில் அடிபடுகிறது. சுயமரியாதை மகா நாடுகள், சங்கங்கள், பத்திரிகைகள், தலைவர்கள், பிரசாரகர்கள், தொண்டர்கள் என்றெல்லாம் நாடோறும் கேட்கிறோம். ஆனால் சுயமரியாதை என்றால் என்னவென்பதை மட்டும் நன்றாக ஆராய்ந்து உணர்வதற்கு நமக்குப் போதிய அவகாசமில்லையா அல்லது பகுத்தறிவில்லையா, இல்லையெனின் நடுநிலைமையுணர்ச்சிதான் இல்லையா என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை. நமது நாட்டிலுள்ள அநுட்டானத்தைக் கவனித்தால் சுயமரியாதை என்ற பெயரால் நடக்கின்றவைகளைச் சுயமரியாதை என்று சொல்வதற் கிடமில்லை. ஒருவன், "கடவுள் இல்லை, கோயிலுக்குப் போகக் கூடாது" என்பதே சுயமரியாதையென்கின்றான். மற்றொருவன், "பார்ப்பனப் புரோஹிதம், பார்ப்பன அர்ச்சகர் பூசை முதலிய பார்ப்பனீயத் தொண்டுகளை ஒழித்தலே சுயமரியாதை" என்கின்றான். வேறொருவன், "எல்லா ஜாதிகளும் ஒன்றுவதே சுயமரியாதை" என்கின்றான். இவ்வாறு நெடுக ஆராய்ந்து சென்றால் சமயம், சடங்கு, சாதி முதலிய பல துறைகளில் ஏதாவது ஒன்றிரண்டை வற்புறுத்தி அதையே சுயமரியாதை என்று கொள்வது வழக்காக இருக்கிறது. இப்போலி வழக்கங்களையெல்லாம் விடுத்து உண்மையிலே சுயமரியாதை (Self-Respect) என்ற சொல்லின் பொருளைச் சற்று ஆராய்வாம்.

சுயமரியாதையென்பது ஒவ்வொருவனும் தன்னையொரு பொருளாக

மதித்து நடந்துகொள்ள வேண்டிய முறை. இதைச் சில உதாரணங்கள் மூலம் விளக்கினால் உண்மை எளிதில் புலப்படும். பெரும் பொருள்படைத்த செல்வன் ஒருவன் நூறு ரூபாய் விவகாரம் ஒன்றில் ஒரு பொய் சொல்ல நினைக்கும்போது அவனுடைய நெஞ்சம் அவனைப் பார்த்து, "செல்வனே, இவ்வளவு பொருள் படைத்தும் நூறு ரூபாய் வருமென்று ஏன் பொய் சொல்லுகிறாய்? உன்னை உலகத்தார் என்ன நினைப்பார்கள்! வேண்டாம்; உண்மையையே பேசு." என்று சொல்லும். அவன் அதைக் கேட்டு, "நம்முடைய அந்தஸ்துக்கு இவ்வாறு பொய் சொல்வது குறைவு. மெய்யே பேசுவேன்" என்று உண்மையையே கூறுவான். இங்கு இவன் செய்கை சுயமரியாதை பொருந்தியது. இவன் பொய் சொன்னால் அச்செய்கை சுயமரியாதை பொருந்தாத செயலாகும். இந்த உதாரணத்தைக் கவனித்தால், முதலாவதாகத் தன்னை யுலகத்தார் மதிக்கின்ற அளவு எப்போதும் குறையக்கூடாதென்ற உணர்ச்சி இச் செல்வனிடத்தில் இருக்கிறது. உலகத்தார் தன்னை மதிக்கின்ற மதிப்பே ஒவ்வொருவனுடைய சுயமரியாதைக்கும் அளவுகோலாக விருக்கிறது. ஆகவே உலகத்தாரால் என்றும் நன்கு மதிக்கப்படும் கல்வி, அறிவு, ஒழுக்கங்களே உண்மைச் சுயமரியாதையின் அடிப்படை. செல்வப் பொருள் உள்ளவரை தான் ஒருவனை உலகம் மதிக்கும். இன்றைக்கு லக்ஷாதிபதியாகவுள்ளவன் நாளைக்கு இன்ஸால்வெண்டு கொடுத்துவிட்டு, சுயமரியாதை யற்ற கொலை, களவு, காமம் முதலிய பல செயல்களில் ஈடுபடுவதை நாம் கண்கூடாகக் காண்பதால் செல்வ[illegible] யாதைக்கு அடிப்படையாகாது. ஆனால் தற்போது இத்தமிழ்நாட்டிலுள்ள சுயமரியாதைத் தலைவர்களும், பத்திராசிரியர்களும் கூறுவது யாதெனில், "நாங்கள் படித்தவர்களல்ல. ஒழுக்கமுடையவர்களுமல்ல. எங்கள் பாலயத்தில் கெட்ட நடவடிக்கை எங்களுக்குண்டு. ஆகையால்தான் பெண்களுக்கே கற்பு வேண்டாம் என்று கூறுகிறோம்" என்பதே. இது புனைந்து கூறுவதல்ல; ஒரு மகாநாட்டில் ஒரு தலைவர் கூறிய உண்மைக் கூற்றே. இதிலிருந்தும் இதுபோன்ற ஏனைய சொற்களிலிருந்தும் சுயமரியாதைக்கு இன்றியமையாத அடிப்படையான கல்வி, அறிவு, ஒழுக்கங்கள் இத்தலைவர்களிடத்தில் இல்லையென்பது கூறாமலே விளங்கும்.

உலகத்தார் தன்னை மதிக்கின்ற மதிப்பே உண்மைச் சுயமரியாதைக்கு அளவு கோல் என்று மேலே கண்டோம். இதினின்றும், "உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" என்ற வாக்கின் அருமை புலனாகும். உலகம் பழித்தது ஒழித்து விடுதல் மேன்மை யென்ற தெய்வப்புலவர் வாக்கும் ஈண்டு கருதற்பாலதே. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்ற நிகண்டு வாக்கியத்தையும் இங்கு வருவித்தால் கற்றறிந்த ஒழுக்கச் சீலர்கள் செல்லும் வழியே செல்லுதல் மேன்மை, அதுவே சுயமரியாதை யென்பது நன்கு புலப்படும்.

சுயமரியாதை யென்பது இருகூறாக இருக்கிறது. தன் சுயமரியாதை யென்றும் (individual self-respect) தன்னாட்டுச் சுயமரியாதை யென்றும் (national self-respect) இரண்டு



பிரிவாக உண்டென்பதைச் சுயமரியாதைத்தலைவர்கள் இற்றைவரை உணர்ந்தார்களில்லை. இவ்விரண்டனுள் முக்கியமாக கவனிக்க வேண்டியது தன்னாட்டுச் சுயமரியாதை. நம் நாட்டைக் குறைகூறிப் பன்முறையிலும் இழித்து அயல் நாட்டவர்கள் எள்ளி நகையாடும் முறையில் நமது கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் விளக்கியுள்ள கன்னி மேயோவின் இரண்டு புத்தகங்களை இந்தியா தேசத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் பிரமுகர்களும் சில வெள்ளைக்காரர்களும் இகழ்ந்து கூறியிருக்கின்றனர். ஆனால் நமது தமிழ்நாட்டுச் சுயமரியாதை வீரர்களோ இந்த நூல்களைப் புகழ்ந்தும் மொழிபெயர்த்தும் பரப்பி வருகிறார்கள். இதிலிருந்து இரண்டிலொன்று புலனாக வேண்டும். ஒன்று இந்த நூல்கள் தன்னாட்டுச் சுயமரியாதைக்குக் குறைவானவை என்பதை யறியாத மந்தபுத்தி, மந்தவுணர்ச்சி அவர்கள் பால் குடிகொண்டிருக்க வேண்டும்; இன்றேல் கன்னி மேயோ விடம் கைக்கூலி பெற்று அந்நூல்களைப் பரப்பும் இழிதொழில் செய்ய அவர்கள் கூசாமல் முன்வந்திருக்க வேண்டும். தன்னாட்டுச் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டால்தானே தன் சுயமரியாதை நிலைக்கக் கூடும். தென்னாப்பிரிக்காவிலே இந்தியர்கள் தங்கள் நாட்டுச் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளமுடியாமையால் தங்கள் சுயமரியாதையையும் மிகத் தாழ்ந்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆகவே தமிழ்நாட்டுக்கும் இந்தியா தேசத்திலுள்ள ஏனைய பகுதிகட்கும் பொதுவாகவுள்ள கொள்கைகளையும், பழக்க ஒழுக்கங்களையும் காப்பாற்றிக் கொள்வதே உண்மைச் சுயமரியாதையில் நாட்டமுடையவர்களின் முதற் கடனாகும். பின்னர், தமிழ்நாட்டு நூல்களையும் ஆன்றோர்களையும் போற்றி அவர்கள் சென்ற வழி சென்று அதற்கு மாறு பட்ட பழக்கங்களையெல்லாம் ஒழித்தலே தமிழ் மக்கள் செய்தற்குரிய அரிய சுயமரியாதைச் செயல்கள். இதன் பின்னர் நல்ல ஒழுக்க நூல்களைக் கற்றுணர்ந்து அவ்வழி நின்று ஒழுகுவோரே தம் சொந்தவாழ்க்கையில் உண்மைச் சுயமரியாதையுடைய வீரர்கள். இதற்கு மாறாக நடப்பவர்களே போலிகள், காலிகள், கூலிகள் என்று சுயமரியாதைப் பத்திரிகைகள் கூறும் அறிவிலிகளாவார்.

சுயமரியாதையை வெகு பதமாக வைத்துக் கொள்ளவேண்டும். இன்றேல் அது முற்றிச் சுய இறுமாப்பாக மாறிவிடும். இறுமாப்பே மக்கள் வாழ்க்கையைத் தொலைப்பது. அதை அறவே ஒழிப்பதே சைவர்களின் ஆயுள் முயற்சி. இந்த பதத்தை நன்கறிந்து உண்மைச் சுயமரியாதையை எந்த வழியில் பரப்பலாம் என்பதையெல்லாம் நன்குணர்ந்தே திருப்பாதிரிப் புலியூரில் சைவர் மகாநாட்டில் அரிய தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன. அம்மகாநாட்டை நடத்திவைத்த உயர் திரு ஞானியார் சுவாமிகள் போன்ற உண்மைச் சுயமரியாதையுடையவர்கள் இந்நாட்டில் கிடைத்தலரிது. பேரறிஞர், ஒழுக்கச்சீலர், மடாதிபதி என்ற எந்த வகையில் கவனித்தாலும் அவர்கள் பெருமையும் சுயமரியாதையும் தமிழ் மக்களுக்கு ஆர்வத்தையே தரும். அத்தகைய

பெரியார் முன்னிலையில் நிறை வேறிய தீர்மானங்களே உண்மைச் சுயமரியாதைப் பொறிக்கப்பட்ட செப்பேட்டுப் பட்டயமாகும். அப் பட்டயத்தின் துணை கொண்டு எல்லாச் சைவ சபைகளும் சைவ நன்மக்களும் உண்மைச் சுயமரியாதையை உண்மைச் சைவத்தோடு இணைத்து இன்புறு மாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

---

# "அறுசமயப் பகுதி"

[அ. காளியப்ப பிள்ளை]

ஈண்டு ஆராயப் புகுவது பழந் தமிழ் நாட்டுச் சரிதையில் மூன்றாங் காலத்தது ஆகும். அது சைவத்தின் வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றியது. கடைச்சங்கக் காலத்தின் முற்பகுதியில் முடிவு கட்டிய விஷயத்தை இங்குப் பேசுதல் புக்கேம். "அறு சமயப் பகுதி" என்ற சைவ முடிவிற்கு முன்னமேயே பார்ப்பனீயம் தமிழ்நாட்டில் புகுந்துவிட்டது. அம்முடிவிற்குப் பின்னே பௌத்தம் தமிழ்நாட்டில் புகுந்தது. இனி எடுத்துக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரைக்குச் செல்வாம்.

மனிதனுடைய வாழ்க்கையைப்பற்றி பழந்தமிழ் நாட்டுச் சரித (Ancient History of Tamil-land) காலந் தொட்டே தீவிரமான ஆராய்ச்சியிருந்து வந்திருக்கின்றது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் மனித வாழ்க்கையைப்பற்றி மாபெரும் தலைவர்கள் ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார்கள். ஆங்கில நாட்டில் ஷேக்ஸ்பியர் என்ற பெருங்கவி மனிதவாழ்க்கையை அழுங்குழவி, பள்ளிப்பிள்ளை வாலிபன் ஆதிய ஏழு பிரிவினதாக வகுத்துப் பேசி யிருக்கின்றார். இன்னும் மனித வாழ்க்கையை இரண்டு பிரிவினதாகவும், மூன்று பிரிவினதாகவும், நான்கு படித்தானதாகவும் கூறுவாரும் உளர். இவ்வாறு மனித வாழ்க்கையாராய்ச்சியானது பல திறத்ததாய் பல படித்தா யிருந்து வந்திருக்கின்றது. ஆனால் மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையுள்ள வாழ்க்கை என்ற தத்துவமானது பழந்தமிழ் நாட்டிலும் ஆராயப்பட்டு ஆறு பிரிவினதாக அமைக்கப்பட் டிருக்கின்றது. இவ்விதம் மனித வாழ்க்கையை ஆறு பிரிவினதாகப் பிரித்து அவ்வாறு படித்தாய வாழ்க்கையை முட்டின்றி நடத்துவதற்கு ஆறு வகையான ஒழுக்க நெறியை உலகிற்குதவியிருக்கின்றார்கள். அதுவே "அறு சமயப் பகுதி"யாகும்.

முதலாவது பாலப்பருவம். மனித வாழ்க்கையின் பாலப்பருவ வாழ்க்கைக்குக் குறிக்கோளா யுள்ளது கணபதியின் உருவம். இவ்வுருவத்தைப் பற்றி, புராண கதைகள் பல வாயிருப்பினும் இடையே புகுத்தப்பட்ட பொய்க் கூற்றுகளை ஒதுக்கி அரும் பெறல் மணியாய் மிஞ்சியவற்றைக் கைக் கொண்டு பாலப் பருவத்தை நோக்குவோமாக. முக்கியமாகக் கணபதியை வழிபடுகிறவர்கள் தமிழ்ப் பள்ளிப் பிள்ளைகளே யாவர். பழங் காலந்தொட்டே தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் பிள்ளையார் ஞாபகார்த்த நாளைக் கொண்டாடுவதைக் கண்டிருக்கிறோம். பள்ளிப் பிள்ளைகள் கணபதியைக் கும்பிடுவதால் எவ்வித அறிவுவளர்ச்சி ஏற்பட்டதென்று நோக்குவோமாயின் அது பின்வரும் தகையதாகும். கணபதி உருவத்தைப் பலதரம் கண்டும் அதன் குறிக்கோள் என்ன, பொருள் என்ன, பயன் என்ன என்று ஆராயப் புகும் பள்ளிச்சிறார் மிகச்சிலர். ஆராயப்புக்க பள்ளிப் பிள்ளைகளுக்குக் கணபதி உருவ விளக்கம் செய்யும் ஆசான்கள் அதனினும் சிலர். எனினும் ஈண்டு கணபதி உருவ விளக்கம் அவசிய மாகின்றது; ஆகலின் அதை விளக்கி மேற்செல்வாம். கணபதி உருவமானது "மனித வாழ்க்கை தாய் வயிற்றுக் கர்ப்ப காலந்தொட்டே ஆரம்பிக்கின்றது" என்பதைச் சுட்டும். கர்பத்தினுள் சிசுஉருவ அமைப்பு ஆவதற்குமுன் சிசுவின் மூக்கானது நீண்டு தாயின் சுவாசக்குழல் நரம்போடு பொருத்தப்பட் டிருக்கின்றது. சிசுவின் மூக்கின் நீட்டமானது கணபதி உருவின் தும்பிக்கைப் பொருளாகும். இந்தச் சிசுவாழ்க்கையானது மற்றும் பின்னால் கூறப்புகும் குறிக்கோள் வகைக்கு அடிப்படையானதால் அதை யாவற்றிற்கும் மூலமானது என்று புகல்வர். இவ்வாறு கணபதி வழிபாடானது மனித வாழ்க்கைக்கு ஆரம்பமான தென்றும், அவ்வழிபாட்டின் காரணமாய் அமைந்த தின்பண்ட வகைகள் எல்லாம் பாலர்கட்கு உரித்தானதாக இருக்கவும் காணலாம். இதுபற்றி ஔவையாரும் பள்ளிப் பிள்ளைகளுக்கேற்ப விநோத விளையாட்டாகப் பாலர்கட்கு 'வேழமுகம்' அருளிப் போந்தார். கணபதி உருவத்திற்கும் பால்ய வாழ்க்கைப் போக்கிற்கும் உள்ள குறிக்கோள் பொருத்தத்தை வேழமுகத்தில் பரக்கக் காண்க.

அடுத்த பருவம் குமரப் பருவமாகும். இப்பருவத்தில் முருகன் வழிபாடு முக்கியமானது. மனித வாழ்க்கையிலுள்ள இப்பகுதியானது வாலிபப் பருவம் என்றழைப்பினும் அமையும். வாலிபர்களுக்குக் குறிக்கோளா யுள்ளது முருகனுடைய வடிவம். முருகன் வாலிப ஒளியும் வீரமும் விரிந்த கலையில் ஆர்வமும் கொண்டிருத்தல் கண்கூடு. முருகன் என்ற பதத்திற்கு அழகுத் தெய்வமென்று பொருள் கூறுவர். மனிதனுடைய வளர்ச்சி அல்லது விளைவானது கருப்ப காலத்தில் தொடங்கி,பாலப்பருவம் கடந்து முருகப்பருவம் வரையும் எட்டிப் பின்னும் பக்குவமடைகின்றது. மனிதனுடைய பூரண வளர்ச்சியையும், விளைவையும் முருகன் குறிப்பான். கல்வி ஆர்வத்தாலும், அகப்பொருள் உணர்ச்சியாலும் வாலிப அழகு உருவமானது மருப்படாதிருக்க வேண்டும். முருகப் பருவத்தைப்பற்றித் தனித்த விரிந்த வேறு ஆராய்ச்சியில் கூறுதும்.

மூன்றாவது வாழ்க்கைப் பருவமானது சூரியனுடைய நிலையை ஆதாரவாகக் கொண்டது. இந்தப் பருவத்தை ஆராய்ச்சி செய்த வேதாந்த சித்தாந்திகள் மயக்க முற்றொழிந்தனர். சூரியனைக் குறிக்கோளாகக் கொண்ட சமயப்பகுதி விகுதிகளும் கோவில்களும் அழிந்து நசித்தன. எனினும் நமது அண்ட (Solar system)த்திற்குத் தலைவனாகிய சூரியன் அழிந்து

# மதக்கொள்கையும் நம்பிக்கையும்

[C. S. சாமிநாத முதலியார் B. A.,]

உலகத்தில் மனிதர்கள் செய்யும் காரியங்களெல்லாம் அவரவர்கள் நம்பிக்கையைப் பொறுத்தே நடைபெறுகின்றன. ஆராய்ச்சிசெய்து அறிவால் தாங்களே ஒரு முடிவுக்கு வந்து அதன்படி நடப்பது என்பது மிகச் சிலரிடத்தே காணப்படும். அவர்களும் சில காரியங்களில் நம்பிக்கையைப்பற்றியே செல்லவேண்டி வருகிறது. பெரும்பாலார் கல்வி கேள்விகளாலும் தங்கள் ஆலோசனையாலும் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டாலும் அநேகமாய் வாழ்க்கையில் செய்யும் காரியங்களில் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டே முயல வேண்டியதவசியமாகிறது.

சென்னையிலிருந்து பம்பாய் நகரத்திற்கு முதல்முறை ஒருவன் செல்லவேண்டுமானால் முன்போய் வந்தவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைத்து அவர்கள் சொல்லும் வழியில் செல்லவேண்டும். நம்பிக்கை என்பதை முற்றிலும் விட்டுத் தானே ஆராய்ச்சி செய்து வழியைக் கண்டு பிடித்துச் செல்வதென்றால் அவன் பிரயாணம் எப்படி முடியும் என்பதைப் பற்றி இங்கு வரையவும் வேண்டுமோ?

ஆனால் நம்பிக்கை வைப்பதிலும் மூட நம்பிக்கையாயில்லாமல் கூடிய வரையில் பகுத்தறிவால் பார்த்து வைப்பது எல்லோரும் செய்யக் கூடியதே. நாம் ஒருவனைப் போய் வழி கேட்க வேண்டுமானால் நம் அநுபவத்தில் தெரிந்தமட்டும் அவன் பொய் சொல்லாதவனா, சுயகாரியத்திற்காகத் தப்பு முறையில் தள்ளி நமக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணிப் பின்பு தனக்கு ஒரு சுகத்தைப் பெறவேண்டுமென்ற எண்ணமில்லாதவனா என்று ஆலோசனை செய்து நாம் அவனிடம் சென்று வழியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பின்பு அநுபவத்தினால் அந்தவழி நமக்கேசரியானதென்று தெரிந்து விடுகிறது. மேலும் அதிலும் சிலசில இடங்களில் குறுக்கு வழிகளோ, வழியில் முன் கேள்விப்படாத வசதிகளோ நம் ஆராய்ச்சியினால் தெரிந்து நாம் புறப்பட்ட காலத்தில் கேள்விப் பட்டதினும் மேலான அறிவு நமக்கு உண்டாகி விடுகிறது. பின்பு வேறு சிலர் நம்மிடம் அந்தப் படியில் வழிகேட்க வந்தால் நாம் நம்மிடம் நம்பிக்கை வைத்து நடக்கத் தைரியஞ் சொல்லி நாமும் வழிகாட்டியாவோம்.

மேல்நாட்டு அறிவியல் ஆராய்ச்சிக்காரர்களும் மேற் சொன்ன நம்பிக்கை முறையையே வழியாகக் கொண்டுதான் அநேக உண்மைகளை மேலும் மேலும் கண்டுபிடித்து அறிவியல் வளர்ச்சியிலும் அநேக இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதிலும் உலகத்திற்குப் பயனையளித்திருக்கிறார்கள். வானசாஸ்திர ஆராய்ச்சியில் தலைப்படுபவன் கீர்த்திபெற்ற வான சாஸ்திரிகள் கண்டு பிடித்த உண்மைகளில் பெரும்பாலும் நம்பிக்கை வைத்து மேல் தன் ஆராய்ச்சியை நடத்துவான். தன் வீட்டில் உள்ள ஒரு கல்வி கேள்வியில்லாத தன்னிடத்தில் மிக அன்புள்ள ஒரு பாட்டியார் சொல்வதை அடிப்பீடமாக வைத்துக் கொண்டு வானசாஸ்திரி ஆராய்ச்சியை நடத்தமாட்டான். இக் காலத்தில் நூதனமாகஸ்தாபிக்கப்பட்ட உண்மைகளை நோக்காது சென்ற நூற்றாண்டில் அவைகளுக்கு முரணான ஒரு வான சாஸ்திரி எழுதி வைத்துப்போன வற்றையே ஆதாரமாகக் கொண்டும் தன் ஆராய்ச்சியை ஆரம்பிக்க மாட்டான். மேற் சொன்ன உதாரணங்களால் பெறப்படுவதென்னவென்றால் உலகத்தில் நாம் மேலும் மேலும் முறை முறையே நல்ல வழிப் படுவதற்குப் பகுத்தறிவு, நம்பிக்கை, சுய ஆராய்ச்சி இவை மூன்றுமே இன்றியமையாதனவாக வேண்டற்பாலன என்பதே.



மதக்கொள்கைகளைப்பற்றிய முறைகளிலும் இவை தேவையாக இருக்கின்றன. ஆத்மவளர்ச்சியின் பொருட்டு தேகத்தையும் இந்திரியங்களையும் அடக்கி நல்வழிப்படுத்தவும் மனம் வாக்குக் காயம் மூன்றையும் தூய்மையாகச் செய்யவும், ஈஸ்வர கைங்கரியமாகவும், லோகோபகாரமாகவும் தன் தொழில்களைச் செய்ய ஆற்றலைப் பெறவும் பல வழிகளை நூலாராய்ச்சியால் ஒருவன் தெரிந்து கொள்ளலாம். தன்னுடைய நிலைமையையும் சந்தர்ப்பங்களையும் உற்று ஆராய்ந்து அவ்வழிகளில் தனக்குப் பொருத்தமானவற்றைப் பின்பற்ற ஊக்கத்துடன் பிரயத்தனஞ் செய்யப்புகுங்கால் தன்னைவிட ஆத்மஞானப் பயிற்சியில் மேம்பட்ட ஒரு குரு அவனுக்குத் தோன்றலாம். அவர் சொல்லும் முறைகளை இவன் நூலறிவளவால் பொருத்தமாயிருக்கக் கூடுமா என்று தன் பகுத்தறிவை உபயோகித்துப் பார்க்கலாம். ஒருவாறு இப்படி திருப்தியடையலாம். பகுத்தறிவை உபயோகிக்க வேண்டியதில் இதுவொருவழி. இவ்வழியில் முற்றிலும் திருப்தி உண்டு பண்ணிக் கொள்வதற்கு முடியாமலிருக்கும். ஆயினும் அவருடைய வாழ்க்கையைப் பற்றி ஆலோசனை செய்து பார்த்தால் அவர் அநுபவசாலியா அல்லது வெளி வேஷக்காரரா அல்லது வெறும் ஏட்டுச் சுரைக்காயா என்பது புலப்படும். வாழ்க்கையில் தூய்மை, பரோபகாரம், சாந்தம் இந்திரிய நிக்ரஹம் இவைகளில் தேர்ந்தவராகக் காணப்பட்டால் அவரிடம் நம்பிக்கைவைக்கப் பகுத்தறிவே இடங்கொடுக்கிறது. இந்தப்படியும் ஒருவன் தன் பகுத்தறிவையும் உபயோகப்படுத்திக் கொஞ்சம் நம்பிக்கையும் வைத்துத் தன் குரு சொல்லும் முறையில் பயின்று நடந்து வரலாம். பின்பு தன் சுய அநுபவத்திலும் அவர் குறித்த உண்மைகளிற் சில விளங்கலாம். அதன் மேல் நம்பிக்கை மேலிட்டு அவருடைய உதவியை மேலும் மேலும் பெற்று இன்னும் மேற்படிகளிற் செல்லலாம். அநுபவப் பக்குவத்திற்கு ஏற்ப நூற்களிலுள்ள உண்மையறிவும் நன்றாய் விளங்கும். மேல்படியில் மற்றொருகுரு தோன்றி உதவி புரிந்தாலும் புரிவர். சீடனுடைய ஆத்ம வளர்ச்சி, நன்னடக்கை, சாந்தம், முதலியவற்றைக் கவனித்த சிலர் அவனையே தங்களுக்குக் குருவாகக் கொண்டு பயன்பெற நேரிடினும் நேரும். சாதாரணமாக அறிவியல் வழியிற் பயிலும் மாணாக்கர்களும் மேற் சொன்னவற்றிற்கு ஒப்பிடக் கூடிய முறைகளில் தான் தாங்கள் எடுத்துக் கொண்ட சாஸ்திரப் படிப்பில் தேர்ச்சியும் அநு

பவமும் இன்னும் மேலான அறிவும் அநுபவமும் பெறுகிறார்கள். இது உற்று நோக்கின் நன்கு விளங்கும். நூலாராய்ச்சி, நம்பிக்கை, சுய ஆராய்ச்சி அநுபவம் மூன்றினாலும் மத வழியில் புகுந்த சீடன் மேம்பாடடைந்து தானும் உயர்ந்து பிறர் உயரவும் தன் கைங்கரியத்தை ஈஸ்வர ஆராதனையாகச் செய்யலாம். மத வழியில் நம்பிக்கை வேண்டுமென்றால் கண்மூடி மூட நம்பிக்கையென்று கொள்ளத்தகாது. அதில் அறிவியல் வழி சம்பந்தம் இல்லவேயில்லையென்று எண்ணக் கூடாது. அறிவியல் வழியிற்போல் இதிலும் பகுத்தறிவு வேண்டியிருக்கிறது. அறிவியல் வழியிலும் இதைப்போன்றே சற்று நம்பிக்கையும் வேண்டியிருக்கிறதென்று மேலே கூறியிருக்கின்றேன்.

மதக் கொள்கையில் பற்றுள்ளவர்களில் பலரிடத்தில் சிற்சில விஷயங்களில் மூடபத்தியிருக்கலாம். அம்மாதிரியே அறிவியல் வழியிலிருப்பவர்களினும் பலரிடத்தில் சிற்சில விஷயங்களில் மடமை காணப்படும். நம் நாட்டு ஸ்ரீமான் ஜகதீச சந்தர போசு தன் ஆராய்ச்சியிற்கண்ட சில நுண்ணிய விஷயங்களை முதலிற் சொல்லியபோது அறிவியல் வழியில் தேர்ந்தவர்களே அவைகள் உண்மையாயிருக்க முடியாதென்று நன்றாய்ச் செவி கொடுத்துக் கேட்கத் தயாராயில்லாமலிருந்தார்கள். முன்னொரு காலத்தில் சூரியனைப் பூமிச் சுற்றிச் செல்கிறதென்று கண்டுபிடித்துச் சொன்னவரை மேனாட்டார் என்ன பாடுபடுத்தினார்கள் என்பது சரித்திர வாயிலாக நமக்குத் தெரியும்.

ஆகையால் மதப்பற்றுள்ளவர்களிடத்து வேண்டற்பாலன: பொறுமை, ஈஸ்வர ஆஞ்ஞையான விகாச முறையில் சுய அறிவுடன் ஈடுபடுதல், நூலாராய்ச்சி, பகுத்தறிவு, அறிவியல் வழியின் முறையைக் கூடிய வரையிற் பின்பற்றிச் செல்லுதல், சன்மார்க்க நெறியில் வாழ்க்கை நடாத்தும் பெரியாரின் சீரிய சாவகாசம், அவர்களிடத்தில் பக்தி, அல்லது நம்பிக்கை, அந்நெறியில் தாமே சுய ஆட்சியின் வழியில் படிப்படியாய் மேற்செல்லுதல்.

---

# பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

[கி. குப்புச்சாமி முதலியார்]

இவ்வடியினை நாம் பேசுவதன் முன் இவ்வடி நீங்கலாகவுள்ள ஏனைய மூன்று அடிகளையும் சேர்த்து முழுவதற்கும் பொருள் கூறிப் பின்னர் ஆராய்வோம். அதாவது இச் செய்யுளானது பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகிய ஒன்பதாம் திருமுறையுள் கோயில் என்பதைப் பற்றிச் சேந்தனார் கூறிய திருப்பல்லாண்டுள்,

“தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமு மருளிச்



சோதி மணிமுடித் தாமமு
நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
**பாதகத் துக்குப் பரிசுவைத்**
**தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.”**

என்னும் பத்தாவது செய்யுளாயுள்ளதாகும்.

இனி இதன் உரை கூறுவாம்:—

(இ-ள்) தாதையை - தந்தையாகிய எச்சதத்தனை, தாள்அற - தாளானது அறும்படி, வீசிய - வெட்டிய, சண்டிக்கும் - சண்டேசுர நாயனாருக்கும், அண்டத்தொடும் உடனே - பல அண்டங்களோடும் கூடி, பூதலத்தோரும் - பூமியிலுள்ளவர்களும், வணங்க - வணங்கும்படி, பொன்கோயிலும் - பொன்மயமாகிய கோயிலும், போனகமும் - ஆண்டவனுக்குப் படைக்கும் நிவேதனமும், அருளி - அருள் செய்து, சோதி - சோதி நிறந்தங்கிய, மணி - மணிகள் அழுத்திய, முடி - திருமுடியும், தாமமும் - மாலையும், நாமமும் - சண்டேசன் என்கின்ற திருப்பெயரும், தொண்டர்க்கு நாயகமும் - அண்டர் உலகத்திலுள்ள தொண்டர்களுக்கெல்லாம் தலைவராகும் தலைமைத் தன்மையும், பாதகத்துக்கு - தந்தையைத் தாளற வெட்டிய பாதகத்திற்கு, பரிசு வைத்தானுக்கே - மேற்சொல்லிய பரிசுகளைக் கொடுத்தானுக்கே, பல்லாண்டு - பல ஆண்டுகள் வாழவேண்டுமென்று, கூறுதும் - சொல்லா நிற்போம். (எ-று.)

இவ்விதம் கூறியதால் திருச்சேய்ஞலூரில் மறையவர்கள் கூட்டத்தில் ஒருவனாகிய எச்சதத்தனுக்குப் பிறந்த விசார சருமர் என்னும் குமாரரொருவர் தோன்றினரென்றும், அக்குமாரர் தமக்கு உபநயனத்தைத் தமது ஏழாவது வயதில் செய்து வைத்த பிறகு பல பிள்ளைகளோடு பள்ளிக்குச் செல்லுகின்ற காலத்தில், ஒரு நாள் ஆயன் ஒருவன் அவ்வூர் மறையவர் பசுக்களையெல்லாம் மேய்ப்பானாய்ப் பல பசுக்களையோட்டிச் செல்கின்ற காலத்துப் பசுவொன்று அவன் வழி நில்லாது அவனைக் கொம்பால் பாய வருவதைக்கண்டு தன் கையில் உள்ள கோலால் பல முறை அப்பசுவை நன்றாகப் புடைத்தலும், அதுகண்ட விசாரசருமர் மிகுதியும் மனம் நொந்தாராய் அவ் விடையனை நோக்கி எல்லா உறுப்புகளும் தெய்வங்களாகப் பாவிக்கப்படுகின்ற இப்பசுவினை நீ அடிக்கின்றாயாதலால் இனிப் பசுக்களை மேய்க்கும் தொழிலை யானே செய்வேன், நீ இனிச் செய்யவேண்டுவதில்லையென்று அவனுக்குக் கூறிப் பசுக்களுக்குச் சொந்தக்காரர்களாகிய மறையவர்களது உத்தரவு பெற்றுத் தாமே பசுக்களை மேய்த்து வருவாராயினார் என்றும் இவ்விதம் மேய்த்து வருங்காலத்துப் பசுக்களெல்லாம் முன்னிலும் அதிகமாக வேள்விக்கு உரிய பாலைக் கறந்ததுடன் அவற்றை மேய்க்கும் விசாரசருமரை மிகுதியும் விரும்பின என்றும், அவ்விருப்ப மிகுதியால் ஈன்ற கன்றுகளைக் கண்ட காலத்து எவ்விதம் பால் சுரக்குமோ அதுபோல் பாலினைச் சுரந்து இவர் எதிரில் நிற்பனவாயின என்றும், இவ்விதம் தம்மைக் கண்ட பசுக்கள் பாலினைச் சொரிந்து வீணில் தரையில்போக்குகின்றன, ஆதலால் இனி இப்பாலினை ஆண்டவனுக்கே உபயோகிப்போம் என்று எண்ணினராய் மணலில் கோயில் சிவலிங்கம் முதலியவைகளைத் தாபித்துப் பல பூக்களைக் கொண்டு அருச்சித்தும்

புதுக் கலசங்களில் தீண்டுவதற்குமுன் கறக்கின்ற அப்பசுக்களின் பாலைக் கறந்து அபிடேகமுஞ் செய்து வருவா ராயினர் என்றும், இவ்விதம் பல நாள் செய்து வருகையில், அவ்வூரில் வாழ் வாெருவன் ஒருநாள் இதைக் கண்டு மறையவர்க ளிடத்தே சென்று விசார சருமன் விளையாட்டின் நிமித் தம் பாலினைக் கறந்து நிலத்தில் ஊற் றிப் பாழ்படச் செய்கின்றான் என்று கூறின னென்றும், அதைக் கேட்ட மறையவர் மிகுதியும் வெகுண்டவ ராய் விசார சருமர் தந்தை யாகிய எச்சதத்தனைக் கூவி, உன் மகன் செயல் இது வாயிற்று என்று கூறின ரென்றும் அது கேட்ட எச்சதத்தன் இனி இவ்விதம் நடவாதிருக்கச் செய் வதே என் கடனாகும் என்று கூறித் தன் இல்லத்திற்குச் சென்று விசார சருமரை யொன்றும் வினவாது, மறு நாட்காலையில் மகன் செல்வதற்குமுன் சென்று, ஒரு குராமரத்தின் மீது ஏறி ஒளிந்து இருந்தான் என்றும், இவ்வி தம் அவன் ஒளித்திருக்கவும், அதனை யறியாத விசார சருமர் பசுக்களை யோட்டி ஆற்றங்கரைக்குச் சென்று வழக்கம் போல் கோயிலை நிருமித்துச் சிவலிங்கப் பெருமானைப் பூக்களால் அருச்சித்து, பாலினைக் கறந்து அபி டேகம் செய்தாரென்றும், அதுகண்ட எச்சதத்தன் மிகுதியும் விரைந்து ஓடி வந்து தனக்குள்ளதோர் பெரிய சீற் றத்தால் பன்முறை தன்கையிலுள்ள கோலால் விசார சருமரை யடித்தும், அவர் ஒன்றும் கருதாது தம் செயலி லேயே இருப்பதைக்கண்டுக் கோபம் மிகுந்தவனாய்ப் பாற் குடங்களைக் காலால் இடறினன் என்றும், இது காறும் தம்மை யடித்ததைச் சிறிதுங் கருதாத விசார சருமர் இறைவனுக் கென்று இருந்த பாற் குடங் களைச் சிதறிய கால்களை வெட்டி விடு தல் வேண்டுமென் றெண்ணி, அவ்வி தம் எண்ணியவுடன் கையில் உள்ள கோலே வாள்வடிவமாகி நிற்றலும், அதனால் தவறு செய்தவன் தந்தை யென்று அறிந்தும் சிறிதும் தாமதி யாது வெட்டினாரென்றும், அதனால் எச்சதத்தன் கீழ்வீழ்ந்தா னென்றும், தந்தை வீழ்ந்ததையும் கவனியாது விசாரசருமர்தாம் சிவபூசையேசெய்து கொண்டு இருந்தார் என்றும், இறை வன் ஆகாய வீதியில் எழுந்தருளி விசார சருமருக்குக் காட்சிதந்து, "ஈன்ற தந்தையை வெட்டினா யாத லால், இனி யானே உனக்குத் தந்தை யாவேன்; நீ எனக்கு மகனாவாய். இனிச் சண்டேசன் என்கின்ற திருநா மமும், கணங்களுக்குத் தலைமையும், எனக்கு நிவேதிக்கின்ற நின்மாலிய மும், எனது மாலையும் சூடிக்கொண்டு என் கோயிலினுள் நீயுமிருப்பாய்" என்று வரந் தந்தனரென்றும் பெரிய புராணத்துள் கூறுகின்ற கதையை இங்கு உணர்ந்தோம். இனித் திருநாம மும் மாலையும் நாயகத் தன்மையும் பொன்முடியும் திருக்கோயிலும் இறை வன் அருளினன் என்பதை,

"மேலாம் பெரியோர் பலகாலும்
வெகுண்டோ னடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ்சன மாட்டும்
பணியிற் சலியா ரதுகண்டு
மாலா மறையோன் மிகச் செயிர்த்து
வைத்த திருமஞ்சனக் குடப்பால்
காலா லிடறிச் சிந்தினான்
கையாற் கடைமைத்தலை நின்றான்"



"சிந்தும் பொழுதி லதுநோக்குஞ்
சிறுவ ரிறையிற் றீயோனைத்
தந்தை யெனவே யறிந்தவன்றன்
றாள்கள்சிந்துந் தகுதியினான்
முந்தை மருங்கு கிடந்தகோ
லெடுத்தார்க் கதுவே முறைமையினால்
வந்து மழுவாயிட வெறிந்தார்
மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்"

"எறிந்த வதுவே யர்ச்சனையி
லிடையூற கற்றும் படையாக
மறிந்த தாதை யிருதாளுந்
துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த விடையூ றகற்றினராய்
முன்போ லருச்சித் திடப்புகலுஞ்
செறிந்த சடைநீண் முடியாருந்
தேவியோடும் விடையேறி"

"பூதகணங்கள் புடைசூழப்
புராணமுனிவர் புத்தேளிர்
வேதமொழிக ளெடுத்தேத்த
விமலமூர்த்தி திருவுள்ளங்
காதல்கூர வெளிப்படலுங்
கண்டுதொழுது மனங்களித்துப்
பாதமலர்கண் மேல்விழுந்தார்
பத்திமுதிர்ந்த பாலகனார்"

"தொடுத்த விதழிசூழ் சடையார்
துணைத்தா ணிழற்கீழ் விழுந்தவரை
யெடுத்து நோக்கி நம்பொருட்டா
லீன்ற தாதை விழவெறிந்தா
யடுத்த தாதை யினியுனக்கு
நாமென் றருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணை யாற்றடவி
யுச்சி மோந்து மகிழ்ந்தருள"

"செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்குன் மாயை யாக்கையின்
மேலளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேலயன் முதலாந்
துங்க வமரர் துதிசெய்யச்
சூழ்ந்த வொளியிற் றோன்றினார்"

"அண்டர் பிரானுந் தொண்டர்தமக்
கதிபனாக்கி யனைத்து நாம்
உண்ட கலமு முடுப்பனவுஞ்
சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந் தந்தோ
மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலைவாங்கிச் சூட்டினார்"

"எல்லாவுலகு மார்ப்பெடுப்ப
வெங்குமலர் மாரிகள் பொழியப்
பல்லாயிரவர் கணநாதர்
பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச்
சூழ்பல்லி யங்களெனச் சைவ
நல்லாறோங்க நாயகமா நங்கள்
பெருமான் றொழு தணைந்தார்"

என்னும் செய்யுட்களானும் அறிந் துணர்க.

இது நிற்க, நாம் ஈண்டு, பேச எடுத்துக் கொண்ட "பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே பல் லாண்டு கூறுதுமே" என்பதை ஆராய் வோம். உலகத்து மக்கள் விதித்தன செய்து விலக்கியன ஒழிதல் வேண் டும் என்ற முறையின் வண்ணம், தந்தை தாயர் முதலியோரைப் பேணவேண்டு மென்றும், தந்தை தாயர் தெய்வங்களாக மதிக்கப் படுவர் என்றும், அவர்க்கு நன்மை செலுத் துவதற் காகவே நல்ல பிள்ளைகள் பிறக்கின்றார்க ளென்றும், அவ்வித பிள்ளைகளை மக்கள் என்று கருதாது தம் பொருள் என்று கருதுகிறார்க ளென்றும், ஏனெனின் நன்மக்களைப் பெற்ற தந்தை யொருவன் அம்மக்க ளால் பின் செய்யப்படும் தென்புலத் தார் கடன் முதலியவை தம்மையே வந்து சேருகின்றன வாதலால் பொரு ளென்றே கருதி வாழ்கின்றா னென் றும் கூறியிருக்க, தந்தை யென்று அறிந்தும், கால்களைத் தடிந்த விசார சருமருக்கு இவ்வித பரிசுகளை யெல் லாம் கொடுத்தது நீதியாமோ; உங் கள் இறைவன் [illegible] நிலைமை யுடைய

187133.

வன் அல்லன்; என்று கொள்ளலாகாதோ எனின், கொள்ளலாகாதாம். என்னையோ வெனின், பக்குவப்பட்ட ஆன்மா வொன்று மெய்யுணர்வு கொண்டு இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதத்தால் பிரமாண வாயிலானும் இலக்கண வாயிலானும் முப் பொருள்களின் தன்மையுணர்ந்து சதசத்தாகிய ஆன்மாவானது அசத்தோடு நின்ற தன்மையை யொழித்துச் சத்துடன்நின்று உள் இருந்த கள்வனாகிய இறைவன் ஆசாரியனாய் எழுந்தருளி உண்மையை உணர்த்திய காலத்து அவ்விறைவனைச் சாதகத்தாலடைய எண்ணிச் சாதித்து அச்சாதகம் கெடாதவண்ணம் ஐந்தெழுத்து விதிப்படி யோதி நிற்க, அவனே தானேயாகி ஏகனாய் நின்று மும்மலங்களும் நீங்கி நிற்கும் காலத்து அவ்வான்மா செய்யும் வினையெல்லாம் நல்வினையாயினும் தீவினையாயினும் அவை யெல்லாம் ஆன்மாவைச் சாராது. ஆண்டவனே தாங்கிக் கொள்வான் என்று பின்வரும் சித்தியார் செய்யுளால் அறிகின்றோம்.

"இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா
மித மகித மிவனுக்குச் செய்தார் பாலிசையு,
மவனிவனாய் நின்ற முறைமையேகனாகி யரன்
பணியினின்றிடவு மகலுங் குற்றஞ், சிவனு
மிவன் செய்தி யெலா மென் செய்தி யென்
றுஞ் செய்ததெனக் கிவனுக்குச் செய்த
தென்றும், பவமகல வுடனாகி நின்று கொள்
வன் பரிவாற் பாதகத்தைச் செய்திடினும்
பணியாக்கிவிடுமே."

"அரனடிக் கன்பர்செய்யும்
பாவமுமறம தாகும்
பரனடிக் கன்பிலாதார்
புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன்செய்த
மாவேள்வி தீமையாகி
நாரினிற் பாலன்செய்த
பாதகநன்மை யாய்த்தே"

இதுவுமன்றி,

"பீரடைந்த பாலதாட்டப்
பேணுதவன் றூதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந்தான் றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமைவகுத்த தென்னே
சீரடைந்த கோயின்மல்கு
சேய்ஞலூர் மேயவனே"

என்றும்,

"கடிசேர்ந்தபோது மலரான
கைகொண்டு நல்ல
படிசேர்ந்தபால் கொண்டங்
காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற
வெட்டிட் முக்கண்மூர்த்தி"
அடிசேர்ந்தவண்ணம் மறிவார்
சொலக் கேட்டுமன்றே"

என்றும்,

"தாதையை வேதியனை"

என்றும்,

"பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்—சே [திப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தன்செயலாற் றான்."

என்றும் முறையே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், மணிவாசகப் பெருந்தகையும், திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனாரும், சண்டீச நாயனாரின் திருத் தொண்டின் சிறப்பை வியந்து பாராட்டிப் புகழ்ந்திருத்தலை நுணித்தமதிகொண்டு நோக்குவார்க்கு இப்பெருமானின் மாட்சி விளங்காமற் போகாது.



ஆகவே சண்டேசுவர நாயனாரின் திருத் தொண்டையும், அப் பெற்றியால் அவர் அடைந்த பெறற்கரும் பேற்றையும் விளக்கப் புகுந்த சேந்தனார் அடிகளின் நிஷ்காமியத் தொண்டை நம்மனோர்க்கு அறிவிக்குமுகத்தான்,

"பாலுக்குப் பாலகன் வேண்டி
யழுதிடப் பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

என்னுஞ் செய்யுளுக்குப் பின் இச் செய்யுளை யருளிச் செய்தனர் என அறிக. ஏனெனில் மேற் பாட்டில் உபமன்யுவும் திருமாலும் தங்கள் காமியங் கருதி எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை வணங்கித் துதித்து வேண்டியதைப்பெற்று இன்புற்றார்கள். ஆயின் எமது பிரானாகிய சண்டேசுர நாயனாரோ தனக்கென ஒன்றும் வேண்டிலராய் நிஷ்காமியமாய் பேரறிவுப் பொருளாகிய இறைவனை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்கி வழிபட்டதோடு, தான் இயற்றும் வழிபாட்டிற்கு இடையூறு விளைப்பான் தந்தையென அறிந்தும், தன்னைக் கோல் கொண்டு ஓச்சிப் பலவித துன்ப முண்டு பண்ணிய காலத்து ஒன்றுஞ் செய்யாதாராய் பாலை ஊற்றிய காலத்து இப் பெருமான் அவனைத் தண்டிக்க எண்ணங் கொண்டு அவன் இரண்டு தாள்களையும் சேதித்தா ரெனில் இப்பெருந்தகையின் திருத்தொண்டின் உறைப்பு தானென்னே! என்னே! எனப்போற்றிப் புகழ்ந்து, அவர் செய்த தொண்டினுக்கு ஏற்ற பேறுகளை வழங்கிய இறைவனே இறைவன், இவனே முழுமுதற் பெருங்கடவுள், இவ்வித கடவுளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்கினாலன்றி நாம் வீட்டின்பத்தைப் பெறுவதற்கில்லை, ஆதலால் இவ்வெம்பெருமானை வாழ்த்துவதே வாழ்த்து ஆகும் என்று தாம் கொண்ட தெய்வத்தின் பரத்துவத்தையும் அவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் பரிசுகளையும் உலகோர்க்கு எடுத்துக் கூறியவாறு ஆயிற்று. சிவம்.

---

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

**மாணவன்** :—கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே! கல்வியாவது யாது?

**குரு** :—படித்தற் குரிய நூல்களைப் படித்தலே கல்வி யாகும்.

**மா** :—படித்தற் குரிய நூல்கள் யாவை?

**கு** :—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அவற்றை யறிதற்குக் கருவி யாகிய நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலியவைகளுமாம்.

**மா** :—மானுடப் பிறவியைப் பெற்றுக்கொண்டா ரனைவரும் கல்வி கற்க வேண்டுவது இன்றி யமையாததா?

**கு** :—இன்பமே சொரூப மாக வுடைய இறைவனை டாண்டறக்

கலத்தலாகிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதற் குரிய மக்கட்கு அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் இந்நான்குமே உறுதிப் பொருளென்பதாக உயர்ந்தோரால் வகுக்கப்பட்டிருத்தலால் அறத்தைச் செய்தற்கும் பொருளை ஈட்டுதற்கும் இன்பத்தைத் துய்த்தற்கும் வீட்டைப் பெறுதற்கும் வழி காட்டியாக இருப்பது கல்வியே. ஆதலால் பெறுதற்கரிய பிறவி யாகிய மானுடப் பிறவியைப் பெற்றுக் கொண்டா ரனைவரும் கல்வி கற்க வேண்டுவது இன்றி யமையாததே. இதன்றியும் ஒரு பிறப்பிலே ஒருயிர் கற்றுக் கொண்ட கல்வியானது வினைகள் போல உயிரறிவின்கட் கிடந்து அவ்வுயிர் செல்கின்ற எழுவகைப் பிறப்பினுஞ் சென்று அதனை நன்னெறிக்க ணுய்த்தலாலும், மற்றப் பொருட் செல்வங்களைப் போல தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்ற இவராற் கொள்ளப்பட்டு அழிவுறாமல் பிறருக்குக் கொடுக்குந்தோறும் கொடுக்குந்தோறும் குறையாத செல்வமாக இருப்பதோடன்றி வளர்ந்து கொண்டே வருதலாலும் பொறுத்தற்கரிய துன்பம் வந்தவிடத்தும் தளர்வுறாதபடி மனதை ஊக்குவிக்கவுல்லதாக இருத்தலாலும், கற்றவர்கள் இம்மையிலேயே புகழ், பூசை, பொருள் முதலியவற்றைப் பெறுதலைக் கண்கூடாகக் காண்கின்றோமாதலாலும் சில்வாழ் நாட்களையுடைய நம்மனோர்க்குக் கல்வியைப் பார்க்கிலும் உற்ற துணையாக இருப்பது வேறொன்று மின்றென விளக்கமாகத் தெரிவதால் மக்கட் பிறப்பெய்தினா ரனைவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாமலும், காலந் தாழ்க்காமலும் வருந்திக் கற்றுக் கொள்ளல் வேண்டுமென் றறிவாயாக.

**மா** :—இதற்கென்ன பிரமாணம்?

**கு** :—

" அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்று யிர்க்குற்ற துணை "

என்று நமது குமரகுருபர சுவாமிக ளருளியதே பிரமாணமென்க.

**மா**:—மேற்கூறிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை யறிவிக்கும் நூல்கள் சிலவற்றை யறிவிக்க விரும்புகின்றேன்.

**கு** :—திருக்குறள் முதலிய நீதிநூல்களும், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த நூல்கள் பதினான்கும், திருஞான சம்பந்த சுவாமிக ளருளிய தேவார முதலிய பன்னிரு திருமுறைகளும், அவற்றின் வழிப்பட்ட ஆன்றோர்க ளருளிய மெய்ந்நூல்களு மாம்.

**மா**:—நல்லனவுந் தீயனவும் நம் அறிவிற்கே புலனாகும்போது கல்வியை அவ்வளவு வருந்திக் கற்றுக் கொள்வானேன்?

**கு**:— அறியாது கூறினாய்; இன்று நல்லதென்று கண்ட வொன்று நாளை தீமையாக முடிவதையும், இன்று தீமையென்று கண்ட வொன்று நாளை நன்மையாக முடிவதையும் நம் அநுபவத்திற் காண்கின்றோமானபடியால், ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் உள்ளதை உள்ளபடி அறியும் ஆற்றலில்லாதவர்களென்று பெறப்படுதலால் முற்றறிவுடைய இறைவனால் அல்லது



அவனருள்பெற்ற மெய்ஞ்ஞானிகளால் அருளப்பட்ட நூல்களைக் கற்றேயாதல் வேண்டும். இதன்றியும் நம்மை நாம் காத்துக் கொள்வது போல விலங்குகளுங் கூட தம்மைத்தாமே காத்துக் கொள்கின்றன. நாம் நம் இனத்தைக் காத்துக் கொள்வது போல அவைகளுந் தங்கள் இனத்தைக் காத்துக் கொள்கின்றன. நாம் பசித்த காலத்தில் புசிக்கின்ற மாதிரி அவைகளும் பசித்த காலத்தில் புசிக்கின்றன. நாம் நித்திரை வந்த காலத்தில் தூங்குகின்ற மாதிரி அவைகளும் நித்திரை வந்த காலத்தில் தூங்குகின்றன. நமக்குத் தொடுதல், காண்டல், கேட்டல், சுவையறிதல், வாசனையறிதலாகிய ஐவகையறிவுகள் இருத்தல் போலவே அவைகட்கும் தொடுதல், காண்டல், கேட்டல், சுவையறிதல், வாசனை யறிதலாகிய ஐவகை யறிவுகளிருக்கின்றன. எனவே, இவையெல்லாம் பொது அறிவாக இருத்தலால் இவ்வியற்கை யறிவோடு கல்வியறிவாகிய செயற்கை யறிவும் சேர்ந்தாலன்றி உணர்வு மிகுதி காணப்படாமையாலும், அது காணப்படாதொழியவே மக்கட்கும் விலங்கினங்கட்கும் வேற்றுமையின்றெனப்பட்டு மக்கட் பிறப்பாற் பெறவேண்டிய பயனை இழக்க நேரிடுமாதலாலும் கல்வியை வருந்திக் கற்றே தீரல்வேண்டுமென்று தெளிவாயாக. இதனாலன்றோ,

" விலங்கொடு மக்களனைய ரிலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர் "

என்றார் நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்.

**மா** :—அற்றாயின், " கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்று நம் தாயுமான சுவாமிக ளருளியதென்னை?



**கு** :—" கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் " எனக் கூறியது முற்றுப்புள்ளியா? அன்றே! 'கற்றுமறிவில்லாத வென்கர்மத்தை யென் சொல்லுவேன்' என்பதனோடன்றோ அவ்வாக்கியம் முற்றுப்பெறுகின்றது. இதனால் அங்குக் கூறப்பட்ட தென்னையெனின் "ஓதாதார்க்கில்லை யுணர்வொடு மொழுக்கம்" என்றபடி கல்வி யாராய்ச்சி செய்தவர்க்கே நல்லறிவும் நல்லொழுக்கமும் உண்டாகும் என்று பெறப்படுதலால் அந்நல்லறிவைப் பெறுதற்குரிய மருந்தாக இருப்பது கல்வி. அவ்வாறு கற்றும் அறிவில்லையானால் அந்நல்லறிவை உண்டுபண்ணுதற்கு வேறு மருந்தில்லை யாதலாலும், கல்லாதவர்கள் தங்கள் அறியாமையை யகற்றி அறிவைப் பெருக்குதற்குப் பின் கல்வியாகிய மருந்தொன்று இருந்து கொண்டிருத்தலாலும், "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் " என்று கூறினாரேயன்றிக் கல்லாதவர்கள்தான் நல்லவர்களென்று அவர்கட்கு உயர்வு கற்பிக்கவந்தவ ரல்லவென்றறிவாயாக. அன்பனே! நீ கல்வி யாராய்ச்சி யில்லாமலே ஒரு பெரியார் பாடலை எடுத்துக்கொண்டு என்னிடம் கேள்வி கேட்கப் புகுந்ததானது சமய ஆராய்ச்சி யில்லாதவர்கள் சமயத்திற் கூறப்பட்ட வுண்மைகளைக் குற்றங் கூறப் புகுந்து இடர்ப்படுவது போலவும், இராகப்பயிற்சி யில்லாத வொருவன் எல்லா இராகங்களும் ஒரே ஒலியாகத் தனக்குக் காணப்படுவதால் பல இராகங்க ளிருப்பதாகக் கூறுவது ஒத்துக் கொள்ளத் தக்கதல்லவென்று கூறிச் சங்கீத வித்வான்களெல்லாம் நகையா

ஏனென்றால் இவ்வுலகத்திலே அறநெறிவழாது நடாத்தும் ஆண் பெண் இருபாலாரும் செய்யத்தக்க பணிகள் பலவுள. ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் சிற்றறிவும் சிறு தொழிலுமுடையராக இருத்தலால், பல பணிகளையும் தனித்தனியே மேற்கொண்டு நடாத்த வல்லுநரல்லோம். ஆகையினாலேதான் அருளே திருமேனியாகவுடைய நம் ஆண்டவன் ஒருவர்க்கொருவர் துணையாக ஆண்பெண் இருபாலாரையும் அமைத்துள்ளார். இந்நிலையில் பொருளை ஈட்டுதற்கு ஒருவனும் இல்வாழ்க்கையைச் செம்மைப் படுத்தற்கு ஒருத்தியும் இன்றியமையாது வேண்டப்படும். எனவே பெண்கட்கு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பாகிய குணங்கள் இயற்கையாக அமையப் பெற்றிருப்பதாலும் மக்களைப் பெறுதலும் வளர்த்தலும் அவர்கட்கே உரிய கடமையாக ஆண்டவன் அமைத்துள்ளா ரென்பது வெள்ளிடை மலை போல் விளங்கக் கிடத்தலாலும் இல்லின்கண் இருந்து இல்லிலுள்ள காரியங்களை யெல்லாம் பார்த்துக் கொள்ளுதற்குரியாள் அவளே யென்பது இல்லாள் என்ற சொல்லே உணர்த்திக் கொண்டு நிற்றலாலும் உத்தியோகத் தொழிலை மேற்கொள்ளின் அவ்வுத்தியோகத்தைக் குறித்த நாட்களிற் சென்று நடத்தக் கூடாதிருத்தலோடு இல்லின்கண் உள்ள காரியங்களும் செம்மையாக நடைபெறாது சிதறுண்டு போமென்பது நல்லறிவாளர் பலரும் உணரக் கிடப்பதாலும் சமயக் கல்வி மாத்திரம் ஆண் பெண் இருபாலார்க்கும் உரித்தென்றும் உத்தியோகக் கல்வி ஆண்பாலார்க்கேயன்றிப் பெண்பாலார்க்கு அறவே உரித்தல்லவென்றும் அறிவாயாக.

**மா** :— தாங்கள்கூறுவது மறுக்கமுடியாத உண்மைதானென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் தற்கால உலகம் இதனை ஏற்றுக்கொள்ளுமா ?

**கு**:— எப்படி நடப்பது நன்மை பயக்கு மென்பது நமதாராய்ச்சியேயன்றித் தற்கால உலகம் இதனைப் பின்பற்றுமா பின்பற்றாதா என்பது நமதாராய்ச்சியல்ல.

**மா**:— கற்றவர் போற்றும் நற்றவப் பயனே ! தாங்கள் இது காறும் அருளிய நல்லுரையால் பெறுதற்கரிய பிறவியாகிய மானுடப் பிறவியைப் பெற்றுக் கொண்டாரனைவர்க்கும் கல்வியானது இன்றியமையாது வேண்டற் பாலதென்றும், அதுதான் சமயக் கல்வி யென்றும், உத்தியோகக் கல்வி யென்றும் இருதிறப்படலால் சமயக் கல்வி மாத்திரம் ஆண் பெண் இருபாலார்க்கும் உரித்தென்றும், உத்தியோகக்கல்வி ஆண் பாலார்க்கு மாத்திரம் உரித்தே யன்றிப் பெண்பாலார்க்கறவே உரித்தல்ல வென்றும், தருக்க நெறி பிறழாது சுருதி, யுக்தி, அநுபவ வாயிலாக விளக்கியதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகவும் விளக்கமாகத் தெரிந்து கொண்டேனாதலால், இந்நன்னெறியை இவ்வுலகினர் கடைப்பிடித்தொழுகுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் போற்றுகின்றேன்.

---

# பெண்ணடியவர் மூவர்

## க. காரைக்காலம்மையார்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

இறைவன்றனை முன்னிட்டு அடியாள் புல்லறிவிற்கு எட்டிய மாத்திரம் பெண்ணடியவர் மூவர் என்னும் கட்டுரையைப் பற்றி எழுதப் புகுந்தனன்.

மேற்கூறிய பெண்ணடியவர் என்னும் தலைப்பைப் பெண்கள் மூவர் என வைத்திருப்பின், மணிமேகலை, சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களில் பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கிய பெண்மணிகளில் யாவரேனும் மூவரைப் பற்றிக் கூறுதல் இயல்புடைத்தாகும். அங்ஙனமின்றிப் பெண்ணடியவர் மூவரெனக் கூறி யிருத்தலின், எங்ஙனம் சிற்ப வித்தையிற் றேர்ந்த ஓர் அறிஞனால் சலவைக் கல்லிற் செதுக்கித் திரட்டிய ஓர் அழகிய உருவம் அழியினும், அதற்கு முதலாய் அவன் அறிவின்கண் நின்ற உருவம் அழியாமல் என்றும் நிலைபெற் றிருக்குமோ, அங்ஙனமே தன் நினைப்பின் மாத்திரையான் உலகம் முதல் யாவற்றையும் உண்டாக்கி, அவ்வுருவங்கள் யாவும் தன் அறிவின்கண் பதியப்பெற்று அருளுருவம் வாய்ந்துள்ள இறைவன்மாட்டு அன்பு பூண்டொழுகி ஆன்ம லாபத்தை யடைந்த பெண்கள் பலருள்ளும் சிறந்த மூவரைப் பற்றியே எடுத்துரைத்தல் வேண்டுவதாயிற்று. அதினும் பல சமயங்களினின்றும் இறைவனுக்கு அன்பு பூண்டொழுகிய பெண்மணிகள் பலரிருப்பினும், இச்சமாஜம் சைவசமாஜமாதலின் சைவ சமயத்துள் நின்று அன்பு நெறி கொண் டொழுகிய பெண்கள் மூவரைப் பற்றியே ஈண்டுக் கூறுவது சிறப்புடைத் தாகும்.

ஆகவே பெண்மக்களிற் சிறந்தவர்களாகிய காரைக்கா லம்மையார், திலதவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரில் காரைக்கா லம்மையாரைப் பற்றி முதன்மையாகக் கூறுவாம்.

இப் பெண்மணிகளைப் பற்றித் தெய்வத் திருவருள் பெற்ற சேக்கிழார் மிகப் பண்புடன் விளக்கியுள்ளார். அவருடைய வாக்கியங்களைக் கொண்டே யாமும் இங்கு ஆராய்வாம். இவர்களுடைய சிறப்புக்களைத் தெள்ளிதின் உணர்தற்கு இவர்கள் சரிதங்களே இன்றியமையாக் கருவிகளா யிருப்பினும், நம்மனோர்களில் பெரும் பான்மையோர் அவற்றை நன்கு உணர்ந்திருப்பார்க ளாதலின், சரிதங்களைச் சுருக்கிக் கூறி அதில் மறைந்தும் வெளிப்பட்டும் கிடக்கும் சிறப்புக்களை எடுத்தாராய்வாம்.

காரைக்காலம்மையார் சோழநாட்டிலுள்ள அதிசிறப்பு வாய்ந்த காரைக்கால் என்னும் கடற்றுறைப் பட்டினத்தில் பெருங்குடியர் என்னும் வணிகர் மரபில், செல்வத்திற் சிறந்த தனதத்தனாரியற்றிய தவப்பேற்றால் அவருக்குப் பெண் மகவாய்த் தோன்றிப் புனிதவதியார் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று அழகிலும், அறிவிலும் சிறப்புற்று வளர்ந்து வந்தனர். தன

இறைவன், " இவள் நம்மைப்பேணும் அம்மையாவள். இவ் வுருவத்தைத் தானே வேண்டிப் பெற்றனள் " எனக் கூறினர். அம்மையார் அருகணைந்தவுடன் இறைவன் உலகெல்லாம் மகிழுமாறு, " அம்மையே " என்றழைக்க, அம்மையும் இறைவனை " அப்பா " என்று அன்பினல் அழைத்து அவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். இங்ஙனம் தூய உள்ளத்துடனும், புறப்பற்றற்றும் வணங்கிய காரைக்காலம்மையாரைச் சிவபிரான் தாங்கி, உமக்கு என்னிடம் வேண்டுவதென்னை? எனக் கேட்டனர். அதற்கவர், " வினையொழித்து வீடருளும் எம் பெருமானே! யான் உம்மாட்டு என்றும் அழியாத இன்ப அன்பைப் பெறவேண்டும்; இன்னும் இவ்வுலகில் பிறவாதிருத்தல வேண்டும்; அங்ஙனமின்றிப் பிறக்க நேர்ந்தால் உம்மை என்றும் மறவாமை வேண்டும்; அன்றியும் நீர் திருக்கூத்து இயற்றுகையில் எப்போதும் உம் திருவடிக் கீழிருந்து பாடி மகிழ வேண்டும் " எனக் குறையிரந்து இறைஞ்சி நின்றனர். அம்மையார் எண்ணத்தை யறிந்த சிவபெருமான், அவர் வேண்டியவாறு வரமளித்துத் திருவாலங் காட்டில் தானிருக்கும் கோயிலை நண்ணி அங்கு தன் ஆட்டங்கண்டு களித்துப் பாடும்படி கட்டளை யிட்டனர். அங்ஙனமே அம்மையார் திருவாலங் காட்டிற்குத் தலையாலே நடந்து சென்று சிவபிரான் திருவடிக் கீழிருந்து, " மூத்த திருப்பதிகம் " பாடி என்றும் பேரின்பத்தில் திளைத்திருந்தனர்.

# குருபூசைச் சிறப்பு

சுக்கிலஹு வைகாசிமீ 17உ முருகன் திருவடி நீழலடைந்த பாம்பன்: ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள் குருபூசை சென்ற 27-6-29 முதல் 30-6-29 வரை, அவர் சமாதி யமர்ந்தருளிய திருவான்மியூரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. முதல் நாள் வியாழக்கிழமை இரவு மல்லிகைப் பூக்களால் நவமாகச் செய்யப்பெற்ற அழகிய விமானத்தில் ஸ்ரீமத் சுவாமிகள் திரு உருவப்படத்தை அமைத்து நிகழ்த்திய ஊர்வல விழா அனைவர் உள்ளத்தையுங் கவர்ந்தது. விழா முடிந்ததும் வெள்ளி காலைவரை சுவாமிகள் சமாதிக்கு ஆறுகால பூசை நடந்தது. அன்று பகல் ஏழைகட்கும் அடியவர்கட்கும் அன்னமளிக்கப் பட்டது. ஞாயிறு காலையிலும் மாலையிலும் ஸ்ரீமான்கள் ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், அண்ணாமலை முதலியார், மா. துரைசாமி முதலியார், [illegible]நாத சாஸ்திரியார், [illegible]சுந்தர முதலியார் முதலியவர்கள் ஸ்ரீமத்-சுவாமிகள் வரலாறு, அவரது கல்வித்திறம், அவர் முருகனிடத்துக் கொண்ட உறுதி, தவம், அவரடைந்த பேறு முதலிய பொருள்கள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். ஞாயிற்றுக்கிழமையும் மாகேசுர பூசை செய்யப்பட்டது.

வியாழக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் இதற்சென்று சென்னை வாசிகள் பல நூற்றுக்கணக்காக அவண் போந்து குழுமினர். நான்கு நாள் இரவும் புராணிகர் ஸ்ரீமான் இராஜா-தங்கவேற் பிள்ளையவர்கள் ஸ்ரீமத்-சுவாமிகள் இயற்றியருளிய குமார சுவாமியத்துள் பழநித் திருவிளையாடற் பிரசங்கம் செய்தார்கள். சுவாமிகளிடத்துப் பேரன்பு கொண்டார் பலரும், சுவாமிகள் சீடர்களிற் பலரும் நான்கு நாளையும் திருவான்மியூரிலேயே கழித்தார்கள். திருவான்மியூர் இந்நாட்களில் அடியவர் வாசஸ்தலமா யிருந்தது. அவ்வூரொங்கும் சுவாமிகள் புகழொலியே முழங்கிற்று.

18133

# மதிப்புரைகள்

**"சைவத்திறவு":**—ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார். விலை அணா 8. முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை. இது ஆசிரியர் தூத்துக்குடியில் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் விரிவு, "தென்னாடுடைய சிவனே போற்றி", "தோடுடைய செவியன்" முதலிய அருள் வாக்குக்களை மூலமாகக் கொண்டு இயற்றப்பட்ட அரிய விரிவுரை. இந்நூலின்கண் சைவசமயத்தின் நுட்பமான உண்மைகளெல்லாம் அறிவியல் முறையில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சைவரும் வாங்கி வாசித்தற்குரிய உயர்ந்த நூல்; அறிவு செறிந்த நூல்.

**மதுரை மீநாக்ஷியம்மை அகவல், பீஜாக்ஷரமாலிகா, சுப்பிரமணியர் விந்தை, கோயில் இருப்பதா கொண்டு திருந்துவதர், இராமாயணப் போராட்டம், வேசிமக்கள் யார், கோயில் எதற்கு** :—இவ்வேழு நூல்களும் சென்னை ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலையிற் கிடைக்கும். தனிப்பிரதி அணா 1. முதல் மூன்று நூல்கள் உயர்திரு மஹாதேவ யோகிகளால் பார்வையிடப் பட்டவை. தோத்திரங்கட்குரியவை. மற்ற நான்கு நூல்களும் "தேசபந்து" பத்திரிகையில் திருவாளர் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலராலும் அவர் சகோதரர் திரு. தி. பொ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களாலும் கட்டுரைகளாக வெளியிடப்பட்டவை. சுயமரியாதைக்காரர்கள் கூறுவதை ஆராய்ந்து உண்மையை நிலை நாட்டும் திறன் வாய்ந்த நூல்கள். உண்மையுணர விரும்புவோர் ஒவ்வொருவரும் வாங்க வேண்டியது அவசியம்.

**திருஞான சம்பந்தர் கொலைப்பாதகரா** ?—விலை அணா 2. ஷை புத்தகசாலை. ஆசிரியர் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர். சுயமரியாதை யற்ற இக்கேள்விக்கு சுயமரியாதை செறிந்த விடை இந்நூலின்கண் உள்ளது. சித்தாந்தத்தில் வெளிவந்த சுயமரியாதைச் சம்பாஷணையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

**முதுமொழிக் காஞ்சி - மூலமும் உரையும்** :—விலை அணா 6. ஷை புத்தகசாலை ஷை ஆசிரியர். அழகிய முன்னுரையும் தெளிபொருள் விளக்க விரிவுரையும் மாணவர்கட்கும் உதவும்படி எழுதிய பாவலர் அவர்கட்கு வந்தனம். சங்க மருவிய பதினெண்கீழ்க் கணக்கிலொன்றாகிய இந்நூல் தமிழறிஞர் ஒவ்வொருவரும் பயிலுதற்குரியது.

**மாதவச் சிவஞான யோகிகள்** (வணக்கம் சரித்திரச் சுருக்கம்), **திருநாவுக்கரசு நாயனார்** (சரித்திரம், தேவாரத்திரட்டு):—இவ்விரண்டும் சிந்து பூந்துறை அறத்திரு நெறிக்கழக வெளியீடுகள். விலை அணா 1. இவை ஷை கழகத்தின் விழாக்காலங்களில் வெளியிடப் பட்டவை. ஏனைய கழகங்களும் விழாக்காலங்களில் இத்தகைய நூல்களை வெளியிட்டு வழங்குதல் அரும் பணியாகும். இவைபோன்ற துண்டுப்பிரசுரங்கள் மிகவும் பயன்படுகின்றன வென்பது பல சபைகளின் அநுபவத்தில் அறியக்கிடப்பதாகும்.

**தேசபக்தன்** :—இது ஒரு புதினவாரத்தாள். ஆசிரியர்-கா. சோமசுந்தரம்பிள்ளை, 32, பிராட்வே, சென்னை. வருடச்சந்தா ரூ 3. தலையங்கத்தில் இப்பத்திரிகை சமயசீர்திருத்தத்திற்காக வந்திருப்பதாகக் கூறப்பட்டுளது. இக்காலத்தில் சமயசீர்திருத்தத்தின் பேரால் நடக்கின்ற கொடுமைகளும் அட்டூழியங்களும் அளவிறந்தன. அவைகளையெல்லாம் நன்கு விளக்கிக் கடிந்து உண்மை நெறிபற்றி மேல் நோக்கு சீர்திருத்தத்தையே இப்பத்திரிகை பொருட்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம். சீர்திருத்தம் (Reform) உயர்த்தவும் தாழ்த்தவும் செய்யும் இருவகைப்பட்டதெனவும் (Levelling up & levelling down) உயர்த்தும் சீர்திருத்தமே மக்கள் முயற்சியால் வேண்டப்படுவதென்றும் தாழ்த்தும் சீர்திருத்தத்தை ஆணவமலம் மக்கள் முயற்சியின்றித் தானே செய்யும் தகுதியுடையதென்றும் 'தேசபக்தன்' ஆசிரியருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

---

**கடிதங்கள்** (1) திருவாளர் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளையவர்களிடமிருந்து திருநெல்வேலி, திருப்பாதிரிப்புலியூர் கூட்டங்களில் தமது தொடர்பைப்பற்றிய விரிவான பதில் கடிதம் ஒன்று கிடைத்தது. 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளில் அது வெளியாயிருக்கிறது. நமது பத்திரிகையையும் அக்கடிதத்தையும் ஒருங்கே சேர்த்து வாசித்து நண்பர்கள் உண்மையுணருமாறு விரும்புகிறோம். விரிவஞ்சி விடுத்தோம்.

(2) திருவாளர் பொ. முத்தையாபிள்ளை யவர்கள் "பொருத்தமற்ற தீர்மானங்கள்" என்று எழுதிய கட்டுரையில்கண்ட காரணங்கட்கு எவ்வித சமாதானங்கூறி அத்தீர்மானங்களைத் திருப்பாதிரிப்புலியூரில் சைவர்மகாநாட்டினர் நிறைவேற்றினர் என்று வினவுகிறார்கள். அவர்களைத் திருப்பாதிரிப்புலியூருக்கு நேரில் வந்து வாதிக்கும்படி வற்புறுத்தி எழுதியும் ஏன் வரவில்லையென்பது விளங்கவில்லை. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்களையும் அவ்வாறே திருநெல்வேலிக்குவர நேரில் வேண்டிக்கேட்டதில் நான் ரூ. 1000 எடுத்து வந்துதாம் சொல்லும்வகையில் விநியோகிக்கத் தயாராகயிருந்தால் வருவதாக வாக்களித்தார்கள். நானும் நூற்றுக்கொண்டு செக்குத்தாளையும் எடுத்துக்கொண்டு திருநெல்வேலிக்குச் சென்றேன். பண்டிதரவர்கள் வரவில்லை. இப்போது இவ்விருபெரியார்களும் கூடித் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்கட்குச் சென்று திருநெல்வேலி சைவப்பெரியார் தனிக்கூட்டத்தையும் அதன் தலைவர் முதலானவர்களையும் தூற்றி இழிவுரைகள் பகர்ந்து வருவதாகப் பல அன்பர்கள் மூலம் அறிகின்றோம். இச்செயல்கள் அவர்களது சமயப் பொறையின்மை, கீழ்மை முதலிய தூர்க்குணங்களையே விளக்குகின்றன. மேன்மேலும் அவர்கள் இவ்வாறுசெய்வார்களானால் அவர்கள் தொண்டு முழுமையும், பாழுக்கிறைத்த நீராகவே பயனற்றுப்போம் என்பதில் ஐயமில்லை. அவ்வுயிர்கள் செம்மைப்பட இறைவனை வழுத்துகின்றோம்.

---

# ம ணி வா ச க ம ன் ற ம்,

## திருநெல்வேலி

### அரிய நூல்களின் வெளியீடு

இம்மன்றத்தின் வாயிலாகச் செந்தமிழ் வளர்ச்சியையும், சிவநெறி விளக்கத்தையுங் கருதிக் கீழ்க்கண்ட அரிய தமிழ் நூல்கள் வெளியிடப்பெறும். அவைகள் இதுவரை வெளிவாராதனவாய் யாவர்க்கும் எளிதிற்புலனாகும் ஆராய்ச்சித்திறன் வாய்ந்துள்ள முதற் பதிப்புப் புத்தகங்கள்.

இந்நன்முயற்சி தழைக்கும் வண்ணம், அறச்செல்வர்களனைவரும் வெளியீட்டிற்குரிய முன்பணம் முழுதுமாதல், பாதியாதல் உதவி ஊக்கமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

### வெளியிடப்பெறும் நூல்கள்

| | முன்பண விலை | | | பின் விலை | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 1. தமிழ் இலக்கிய வரலாறு (500.பக்கம்) | 2 | 0 | 0 | 2 | 12 | 0 |
| 2. தாயுமானுர் வரலாறும் நூலாராய்ச்சியும் (200) | 1 | 0 | 0 | 1 | 8 | 0 |
| 3. பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் (150 பக்கம்) | 0 | 12 | 0 | 1 | 4 | 0 |
| 4. குமரகுருபர சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் (150) | 0 | 12 | 0 | 1 | 4 | 0 |
| 5. சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (250 பக்கம்) | 1 | 0 | 0 | 1 | 8 | 0 |
| 6. மெய்கண்ட சாத்திரக் கருத்துரை அல்லது சித்தாந்த சாத்திர வசனம் (400 பக்கம்) | 2 | 0 | 0 | 2 | 12 | 0 |
| 7. சைவச் சடங்கு விளக்கம் (200 பக்கம்) | 1 | 0 | 0 | 1 | 8 | 0 |
| 8. திருஞான சம்பந்தர் தேவார உரை பெரும் புத்தகம் வால்யம் 1, 2, | 7 | 0 | 0 | 10 | 0 | 0 |
| 9. திருநாவுக்கரசு நாயனுர் தேவார உரை 1, 2. | 7 | 0 | 0 | 10 | 0 | 0 |
| 10. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவார உரை | 8 | 8 | 0 | 5 | 0 | 0 |
| 11. தமிழ் மொழி வரலாறு (400 பக்கம்) | 2 | 0 | 0 | 2 | 12 | 0 |
| 12. தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துரை (500 பக்கம்) | 2 | 0 | 0 | 2 | 12 | 0 |

கா. சுப்பிரமணியன், எம். ஏ., எம். எல்.,
மணிவாசக மன்றம், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.